10.02.2025 **Page No.**

**S.T.C.NO.**3464/2023

**மனுதாரர் ஆஜரில்லை. 256 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.2, சிவசாமி த/பெ. கந்தசாமி, எம்.பி.எண்.17/2024, தேதி 14.05.2024 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். கடன் கொடுக்கல் வாங்குலுக்கு புரோநோட் எழுதுவதுதான் எனது தொழிலா என்றால் இல்லை. புகார்தாரர் எனது நண்பரா என்றால் இல்லை, அவர் எனது பக்கத்து ஊர்க்காரர் ஆவார். அவரை எனக்கு 10 வருடமாக தெரியும். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புரோநோட்டை நான் தான் எழுதினேன். 21.10.2016ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் வேப்பம்பாளையத்தில் வைத்து எழுதினேன். என்ன கிழமை என்று ஞாபகமில்லை. புரோநோட் எழுதிய தமிழ் தேதி தெரியுமா என்றால் ஞாபகமில்லை. பணம் வாங்கியவரை பணம் வாங்குவதற்கு முன்னரே எனக்கு தெரியும். அவரின் முகவரி பெரம்பலூர் மாவட்டம், பாடலூர், மேற்கு கிராமம் ஆகும். இதை எதிரி சொல்லச் சொல்லத்தான் நான் எழுதினேன். எதிரியின் முகவரியாக எதிரி இதைத்தான் சொன்னார். இதைத்தான் நான் கடனுறுதிச் சீட்டில் எழுதினேன். கடனுறுதிச் சீட்டில் ஒரு திருத்தம் உண்டு என்றால் சரிதான். அந்த திருத்தம் என்னவென்றால் எழுதியதும் சாட்சியில் என்ற கையெழுத்து என்ற இடத்தில் சாட்சி கையெழுத்து செய்தார். சாட்சி கையெழுத்து செய்ய வேண்டிய இடத்தில் நான் கையெழுத்து செய்தேன் அந்த ஒரு திருத்தத்தை தவிர வேற திருத்தம் எதுவுமில்லை. சாட்சியின் முகவரியை சாட்சியே சொல்லச்சொல்ல நான் எழுதினேன்.

2. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. ஒரு சில வரிகள் எழுதுவேன். சாட்சி சரவணனின் முகவரியை அவர் சொல்ல சொல்ல நான்தான் எழுதினேன். சாட்சி பின்னிட்டு சரவணனே அவரது முகவரியை எழுதினார் என்று கூறுகிறார். நான் இப்போது எந்த

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNKR020115982023/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com

வழக்கிற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் புரோநோட் வழக்கிற்காக வந்துள்ளேன். எதிரிக்கும் புகார்தரருக்கும் இடையே நடந்த பணபரிவர்த்தனைக்காக நான் சாட்சியாக வரவில்லை. அதைப்பற்றி எனக்கு தெரியாது. எதிரி புகார்தாரரிடம் கடன் வாங்கியது தொடர்பாக எதிரி புகார்தாரருக்கு தனது சொத்தை எழுதி கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி தெரியாது. எதிரிக்கும், புகார்தாரருக்கும் இதே கடன் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பெரம்பலூர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. கடன் கொடுக்கல் வாங்கலில் ரூ.20000/-க்கு மேல் கடன் கொடுக்க வேண்டும் என்றால் வரைவோலை மூலமாகத்தான் கொடுக்க வேண்டும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. என் முன்னிலையில் எதிரி எந்தவித கடனும் பெறவில்லை என்றால் சரியல்ல. புரோநோட்டில் எதிரியின் முகவரி தவறாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால்தான் இந்த வழக்கில் காசோலை அறிவிப்பு எதிரியின் முகவரிக்கு சார்வு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் முகவரி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. கடன் கொடுக்கல் வாங்கல் நடைபெற்றபோது யார் யார் அங்கு இருந்தார்கள் என்றால் பைனான்ஸ் மேனேஜர் முருகேசன், இளையராஜா, சாட்சி சரவணன் மற்றும் நானும் இருந்தேன். என் முன்னிலையில் எதிரி பைனான்ஸ் மேனேஜரிடம் பணம் கடன் வாங்கியதாகவும், அதற்காக நான் புரோநோட் எழுதினேன் என்பதும் பொய் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்க வந்திருப்பதால்தான் எந்த வழக்கிற்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புரோநோட் வழக்கிற்காக மட்டும் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNKR020115982023/truecopy/order-2.pdf